தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், ராஜா தெருவில் 34 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் 1,206 சதுர அடி பரப்பளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள டாக்டர் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகச்சாலை நியாய விலைக் கடைகளை திறந்து வைத்து, அப்பகுதி மக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.

33.82 கோடியில் தண்டையார்பேட்டை- மின்சாரப் பேருந்துப் பணிமனையைத் திறந்து வைத்தார்!

ரூ.170 கோடியில் 100 புதிய மின்சாரப் பேருந்துகள் - துணை முதல்வர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

ரூ.289 கோடியில் மின்சாரப் பணிமனைகள் மேம்படுத்தல் - புதிய பணிமனைகள் அமைத்தல்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, மார்ச் 4– துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) தண்டையார்பேட்டை மாநகர் போக்குவரத்துக் கழக பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 33.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேம்படுத்தப்பட்ட தண்டையார் பேட்டை–1 மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து வைத்து, 170.00 கோடி ரூபாய் மதிப்பிலான 100 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்து, இரண்டாம் கட்டமாக 750 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கப்படுவதற்காக 289.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின்னேற்ற வசதிகளுடன் மின்சாரப் பணிமனைகளாக மேம்படுத்துதல் மற்றும் புதிய பணிமனைகள் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கவும், சென்னையை உலகின் முக்கியமான நகரமாக உருவாக்கவும் அனைத்து துறைகளின் சார்பாக பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார். போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதோடு, பொதுமக்கள் பயன் பெறும் வகையில் புதிய பேருந்து முனையங்கள் அமைத்தல், பேருந்து நிலையங்களை பயணிகள், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளோடு மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்.

அதனடிப்படையில் சென்னைப் பெருநகர கூட்டாண்மை திட்டத்தின் கீழ், நிலையான நகர்ப்புற சேவைகள் திட்டத்தின் அடிப்படையில் (CCP-SUSP), உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) பங்களிப்புடன், சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், 625 தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. வியாசர்பாடி, பெரும்பாக்கம், பூவிருந்தவல்லி, மத்திய பணிமனை மற்றும் தண்டையார் பேட்டை-1 உள்ளிட்ட ஐந்து பணிமனைகள் மூலம் 697.00 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மொத்த விலை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாழ்தள மின்சாரப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முதற்கட்டமாக முதலமைச்சர் அவர்கள், 30.6.2025 அன்று வியாசர்பாடி மின்சாரப் பேருந்து பணிமனையைத் திறந்து வைத்து, 120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

இரண்டாம் கட்டமாக துணை முதலமைச்சர் அவர்கள், 11.8.2025 அன்று 49.56 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்து பணி மனையைத் திறந்து வைத்து, 135 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

மூன்றாம் கட்டமாக துணை முதலமைச்சர் அவர்கள் 19.12.2025 அன்று மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 43.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பூவிருந்தவல்லி மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து திறந்து வைத்து, 125 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

நான்காவது கட்டமாக துணை முதலமைச்சர் அவர்கள் 26.2.2026 அன்று 52.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேம்படுத்தப்பட்ட மத்திய மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து வைத்து, 145 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) ஐந்தாவது கட்டமாக 33.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேம்படுத்தப்பட்ட தண்டையார்பேட்டை -1 மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து வைத்து, 170.00 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 25 மின்சார குளிர்சாதனப் பேருந்துகள் உள்பட 100 புதிய தாழ்தள மின்சார பேருந்துகளின் இயக்கத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த பேருந்துகள் திருவொற்றியூர் - பூந்தமல்லி, தண்டையார்பேட்டை - பூந்தமல்லி, சுங்கச்சாவடி - திருவான்மியூர், தீவுத்திடல் - மீஞ்சூர், தண்டையார்பேட்டை - எம்ஜிஆர் கோயம்பேடு (CMBT), எண்ணூர் - திருவான்மியூர், தண்டையார்பேட்டை - விவேகானந்தர் இல்லம், தண்டையார்பேட்டை - கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் கிளாம்பாக்கம் (KCBT), எண்ணூர் - எழும்பூர் வடக்கு ரயில் நிலையம், தீவுத்திடல் - மணலி, தீவுத்திடல் - மணலி, தண்டையார்பேட்டை - செங்குன்றம் ஆகிய 12 வழித்தடங்களில் இயக்கப்பட உள்ளன.

மாநகர் பேருந்துகளில் தற்போது வசூலிக்கப்படும் கட்டணமே, புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளிலும் வசூலிக்கப்படும். ஏற்கனவே, வழங்கப்பட்டு வரும் சலுகை கட்டண பயண அட்டைகளையும் இந்த தாழ்தள மின்சாரப் பேருந்துகளிலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கில், இரண்டாம் கட்டமாக (Phase-2) 1337.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மொத்தம் 750 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்குவதற்காக இரண்டு நிறுவனங்களுடன் M/s. OHM Global Mobility Private Limited (380 AC & 120 Non-AC) & M/s. Traveltime Mobility India Private Limited (170 AC & 80 Non-AC) மொத்த விலை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு உள்ளது.

இந்த 750 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் கலைஞர் கருணாநிதி நகர், பெரம்பூர், மத்தியபணிமனை-II, ஆலந்தூர், ஆவடி, ஐயப்பன் தாங்கல், பாடியநல்லூர் ஆகிய பணிமனைகளில் இருந்து இயக்கப்பட உள்ளன.

மேற்கண்ட பணிமனைகளில் இருந்து தற்சமயம் இயக்கப்பட்டு வரும் டீசல் பேருந்துகளை தொடர்ந்து இயக்குவதற்காக தையூர், தரமணி, வரதராஜபுரம், ஆட்டந்தாங்கல், திருவள்ளூர், மாமண்டூர் ஆகிய 6 இடங்களில் புதிய பணிமனைகள் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டுமானம் செய்வதற்காகவும், 7 மின்சாரப் பேருந்து பணிமனைகளை மின்னேற்ற வசதிகள் செய்து மின்சார பணிமனைகளாக மேம்படுத்துவதற்காகவும் ரூபாய் 289.00 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், போக்குவரத்துத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.த.பிரபுசங்கர், இணை மேலாண் இயக்குனர் இராம.சுந்தரபாண்டியன், உயர் அலுவலர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், கபிலர் தெருவில் 7.64 கோடி ரூபாய் செலவில் சென்னை நடுநிலைப் பள்ளிக்காக கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்து, மாணவர்களுடன் உரையாடினார். உடன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளார்.

நே.சிற்றரசு தலைமை! சென்னை மேற்கு மாவட்ட

இலக்கிய அணி அமைப்பாளர் மு.சீனிவாசன் இல்ல திருமண வரவேற்பு விழா!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – அமைச்சர்கள் பங்கேற்பு!

சென்னை, மார்ச்.4– சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மு.சீனிவாசன் - சீ.சாந்தகுமாரி ஆகியோரின் மகன் மு.சீ.திலிபன், தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த கெவின் சிசில் வுட், ஷெரில் லின் வுட் அவர்களின் மகள் கிலோர் மேகன் வுட் ஆகியோரின் திருமண வரவேற்பு இன்று (4.03.2026) மாலை 06.30 மணிக்கும், திருமணம் நாளை காலை 9.00 மணி முதல் 10.30 மணிக்குள், நுங்கம்பாக்கத்தில் உள்ள ஓட்டல் பாம்கு ரோவ்வில் நடைபெற உள்ளது.

திருமண வரவேற்பு நிகழ்ச்சி சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, தலைமையிலும், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் முன்னிலையிலும், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.டி.ஆர். நாதன், 110 அ, வட்ட கழக செயலாளர் த.குணசேகர் வரவேற்பும்,

விழாவில் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர். தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, உயர் கல்வி துறை அமைச்சர் கோ.வி.செழியன், மு.க.தமிழரசு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

கழக மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர். நா.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், மாநில இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன், மாநில இலக்கிய அணி பொருளாளர் நா.சந்திரபாபு, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் நந்தனம் நம்பிராஜன், ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளனர். மற்றும், மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, ஏ.சங்கீதா, பகுதி கழக செயலாளர்கள் நா. இராமலிங்கம், மா.பா. அன்புதுரை, ஏ.ஆர்.பி.எம். காமராஜ். எஸ். மதன் மோகன், ச.பரமசிவம், கள் ஜெ.நற்குணநாதன், டி.ஜோஸ்டேனியல், பா.இராபர்ட், எஸ்.சுரேஷ்குமார், கராத்தே ஆனந்தன், வெற்றி செல்வி மாணிக்கம், வே.கமலாசெழியன், மாவட்ட அமைப்பாளர்கள் ப.பிரகாஷ், துபாய். வி.ஆர்.விஜய், திருமலை பொன்னு ரங்கம், எம்.டி.ஆர். சாரதிமணிமாறன், ச.அசோக்குமார், டி.எஸ்.ராஜா, யோகேஸ்வரி சுந்தர்ராஜன், டி.கே.லதாபிளாரன்ஸ், மெய். சன்முகம், வே.தேவேந்திரன், ஜி.வி.சரவணன், சி.கே.ரங்கராஜ், மு.செந்தில்குமார்,

வட்ட கழக செயலாளர்கள் க.சிட்டிபாபு, வயதை.பரி, மு.மோகன், ச.டேவிட்இன்பராஜ், கோ.யுவராஜ், எப்.பீட்டர்ஜான், ஆர்.பாபு, நுங்கை பல. மகேஷ், எஸ்.என்.கே.ராமன், எல்.தவமணி, எஸ்.சத்யபெருமாள், த.தேவராஜ், எம்.என். விஷ்னு, மாமன்ற உறுப்பினர்கள் மல்லிகா யுவராஜ், எலிசபெத் அகஸ்டின் பாபு, எம்.ஏ.நந்தினி,

இலக்கிய அணி நிர்வாகிகள் புல்லட் பா.கனேசன், டி.தி.பாபு, அரும்.கோ.முரளி, கி.பரமசிவம், து.கந்தசாமி, கி.தம்பிதுரை, பூ.சந்திரகேசவன், நா.அசோகன், ஆர்.சங்கர், வேதா.உதயசூரியன், வி. வெங்கடேசன், ஆர்.ரஞ்சித்குமார், சி.மூர்த்தி, எஸ்.பழனி, பகுதி கழக நிர்வாகிகள் புவி. பாலாஜி, ஸ்டெர்லிங் மோகன், இதயத்பாஷா, பொன்னம்மாள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ப.சீ. கிருஷ்ணசாமி

மார்ச் 4 (2001)

பெரியார் மாவட்டக் கழக பொறுப்பாளர்களில் ஒருவராகவும், பவானி நகரக் கழக செயலாளராகவும் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவராகவும், நகர வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"உயிர் கொள்கைக்கு உடல் மண்ணிற்கு என்று நீ கொண்டிருந்த உறுதியும், எதற்கும் கலங்காத உன் உள்ளமும் என் நினைவிலிருந்து என்றைக்கும் மறையாது!" எனத் தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆர்.ஏ.துரைசாமி

மார்ச் 4 (1978)

நாகை நகர செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

மிசா காலத்தில் நாகை நகரமே வியக்கத்தக்க வகையில் "அண்ணா சிலை" அமைத்து தலைவர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் திறக்கச் செய்தவர்.

நாகை வீட்டு வசதி சங்கத் தலைவராகவும், நீலாயதாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.